# அரசு பொதுத்தேர்வு வினாத்தாள்- ஜீன் 2017

## தமிழ் முதல்தாள்

**காலம் : 2.30 மணி** **மொத்த மதிப்பெண்கள் : 100**

**அறிவுரை** : 1. அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத்தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு** : (i) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.
(ii). வினா எண் **49**-க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

**பிரிவு – I (மதிப்பெண்கள் : 20)**

**பகுதி-1**

**I. உரியவிடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **6 x 1 = 6**

1. திருக்குறளைப் போற்றிப்பாடும் நூல் .........
   அ) நால்வர் நான்மணிமாலை ஆ) திருவள்ளுவமாலை இ) இரட்டை மணிமாலை
2. 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' என்று பாடியவர்
   அ) கவிமணி ஆ) பாரதிதாசன் இ) பாரதியார்
3. கம்பரைப் புரந்தவர் ........
   அ) ஔவையார் ஆ) புகழேந்தி இ) சடையப்ப வள்ளல்
4. தமிழ்த் தென்றல் என சிறப்பிக்கப்படுபவர்
   அ) பேரறிஞர் அண்ணா ஆ) மு.வரதராசனார் இ) திரு.வி.க
5. வள்ளலாரின் இயற்பெயர் ...............
   அ) சம்பந்தர் ஆ) இராமலிங்கர் இ) தாயுமானவர்
6. 'விரல்கள் பத்தும் மூலதனம்' என்றும் பாடலின் ஆசிரியர் ..........
   அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) தாராபாரதி

**பகுதி - 2**

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக** **6 x 1 = 6**

7. நால்வகைப் பாக்களும் வயலுக்கு............. அமைந்துள்ளன.
8. 'தாண்டக வேந்தர்' என அழைக்கப்படுபவர் ............
9. 'அரி' என்னும் சொல்லின் பொருள் ........
10. வெறும் பேச்சுக்கும் ............ பேச்சுக்கும் வேறுபாடு உண்டு
11. 'இன்னா செய்தார்க்கும்' என்னும் திருக்குறளை மொழிபெயர்த்த உருசிய அறிஞர் .........
12. இயங்குரு படங்கள் பார்ப்பதற்கு ........ இருக்கும்.

**பகுதி - 3**

**III. பொருத்துக.** **4 x 1 = 4**

13. அங்கணர் - பேதையார் சொல் நோன்றல்
14. கேழல் - சிவன்
15. அறிவு - ஓய்வெடுத்தல்
16. இளைப்பாறுதல் - பன்றி

பகுதி - 4

**IV. விடைக்கேற்ற வினா அமைக்க.** **4 x 1 = 4**

17. தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்றனுக்கும் இலக்கணம் கூறுகிறது.
18. எல்லா மனிதர்களையும் ஒரே மாதிரியாக நடத்துவதே சமத்துவமாகும்.
19. முதல் மாந்தன் தோன்றிய இலெமூரியாவை மனித நாகரிகத் தொட்டில் என்பர்.
20. “உடம்பார் அழியின் உயிரார் அழிவார்” - என்பார் திருமூலர்

பிரிவு–II (மதிப்பெண்கள் : 20)

பகுதி-1

**V. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.5 x 2 = 10**

21. என்றும் இடும்பைத் தருவது எது?
22. “அன்புள இனி நாம் ஓர் ஐவர்கள் உளரானோம்” – யார், யாரிடம் கூறியது?
23. அப்பூதியடிகள் எத்தகைய பண்பாளர்?
24. வயல்தரும் விளைவுகளாகத் தமிழ்விடுதூது கூறுவன யாவை ?
25. பண்பு எனப்படுவது யாது?
26. கணிமேதாவியார் -குறிப்பு எழுதுக.
27. தேவாரம்-பொருள் எழுதுக.

பகுதி - 2

**VI. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.5 x 2 = 10**

28. உலகில் உள்ள மொழிகளுள் இலக்கிய, இலக்கண வளமுடைய மொழிகள் எத்தனை?
29. மொழிமாற்றம் என்றால் என்ன?
30. ஞாலம்-பெயர்க்காரணம் கூறுக.
31. அமெரிக்க இதழாசிரியரிடம் காந்தியடிகள் பற்றிப் பெண்மணி கூறியது யாது?
32. வளரும் பிள்ளைகளுக்கு இராமலிங்கர் வழங்கிய அறிவுரைகளுள் இரண்டனைக் கூறுக.
33. தாலாட்டு மற்றும் ஒப்பாரி பற்றி எழுதுக.
34. ஒவ்வொருவரும் குறைந்தது எக்கல்வித் தகுதியினைப் பெறுதல் வேண்டும்?

பிரிவு–III (மதிப்பெண் : 24)

பகுதி-1

**VII. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.3x4 = 12**

35. வாயிற்காவலன் பாண்டிய மன்னனை எவ்வாறு வாழ்த்தினான்?
36. குகனும் உடன் வருவதாகக் கூறிய போது இராமன் கூறிய மறுமொழி யாது?
37. சான்றோர் நட்புக்கு உவமையாக புறநானூறு கூறுவன யாவை?
38. புலியின் தோற்றத்தையும் அதன் செயல்களையும் எழுதுக.
39. எவ்வெவற்றையெல்லாம் ‘சாதனைப் பூக்கள்’ என்று இளந்திரையன் சுட்டுகிறார்?

பகுதி-2

**VIII. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.3 x4 = 12**

40. மணக்கொடை குறித்துப் பெரியார் கூறுவன யாவை?
41. கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்கர் ஆற்றிய பணி யாது?
42. பேச்சினைத் தொடுத்தல் முறையை விளக்குக.
43. தொன்மைத் தமிழகம் குறிப்பிடும் பழந்தமிழர் வாழ்வை விளக்குக.
44. காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம் எது? விளக்குக.

பிரிவு–IV(மதிப்பெண்கள் : 10)

**IX. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க** **5 x1=5**

**45.**

நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
செல்வம் அன்றுதன் செய்வினைப் பயனே
சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வம் செல்வமென் பதுவே

i) இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?

ii) இப்பாடலின் ஆசிரியர் யார்?

iii) பொருள் தருக:- நெடிய மொழிதல்

iv) இலக்கணக் குறிப்புத் தருக. – புன்கண்

v) பிரித்தெழுதுக - மென்கண்.

**46. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க. 5x1=5**

தமிழினம் தனக்குவமையில்லா ஒரு தனி இனம். தமிழர் நாகரிகம் தன்னிகரில்லா தனி நாகரிகம், தமிழர் உணவு, உடை, விருந்து, ஈகை, பொறை, நடுவுநிலைமை, அருள் ஆகிய பண்புகளால் சிறந்திருந்தனர். உழவையும், தொழிலையும் மதித்திருந்தனர். வினையை ஆடவர் உயிராகக் கருதினர். சான்றோனாதலே கல்வியின் முடிவெனப் போற்றினர். விருந்தெதிர் கொண்டு வாழ்ந்தனர். புகழெனில் உயிரும் கொடுக்க முனைந்தனர். பழியெனில் உலகைப் பெறவும் மறுத்தனர். ஈந்து உவந்து இன்பம் கண்டனர். இத்தகைய நாகரிகமும் பண்பாடும் மிக்கவராகத் தமிழர் வாழ்ந்தனர்.

**வினாக்கள்:**

i) தமிழர்களின் நாகரிகம் எத்தகையது?

ii) தமிழர்களின் சிறந்த பண்புகள் யாவை?

iii) கல்வியின் முடிவு எது?

iv) புகழ், பழி குறித்து இப்பத்தியில் கூறப்பட்டுள்ள யாவை?

v) இவ்வுரைப் பகுதிக்குப் பொருத்தமான தலைப்பு தருக.

**பிரிவு – V (மதிப்பெண்கள் : 26)**

**பகுதி -1**

**X. கீழ்க்காணும் வினாக்களுக்கு பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. 2 x 8 = 16**

47. அ) காலமறிதலை வள்ளுவர் வழிநின்று விளக்குக.

**(அல்லது)**

ஆ) தமிழ் எவ்விதம் செழித்து வளர்ந்ததாகத் தமிழ்விடு தூது கூறுகிறது?

48. அ) அம்பேத்கர் எத்தகைய இந்தியாவை அமைக்க விரும்பினார்?

**(அல்லது)**

ஆ) கலை, அறிவியல், சிறுதொழில் குறித்து விவரிக்கவும்.

**பகுதி -2**

**49. செய்யுள் வடிவில் விடை தருக. 2+2+3+3=10**

அ) ஒழுக்கம் – எனத் தொடங்கும் குறள்

ஆ) நிலை – என முடியும் குறள்

இ) விடுநனி – எனத்தொடங்கும் கம்பராமாயணப் பாடல்

ஈ) திருமறையோர் – எனத் தொடங்கும் பெரியபுராணப் பாடல்